Regd. No. M. 4593. "KUDI ARASU" 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924. தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

மலர் 18 } சனி, 24-3-1945 பங்குனி-மீ 11உ { இதழ் 24

## காக்கை குருவி சம்பாஷணை

"சித்திரபுத்திரன்"

குருவி—ஓ காக்கையே! நீ எவ்வளவு தான் கஷ்டப்பட்டாலும் பார்ப்பனர்களை ஜெயித்துவிடலாம் என்றோ அல்லது அவர்களுடைய புரட்டுகளை வெளியாக்கிவிடலாம் என்றோ நினைப்பாயேயானால் அது அவ்வளவும் பகற்கனவுதான். காரியத்தில் சுலபத்தில் முடியும் காரியம் அல்ல. அடியோடு தடியடியாய் அடித்தால் அதுவும் ஒரு சமயம் முடியும்.

காக்கை—என்ன குருவியே! நீ இப்படிச் சொல்கின்றாய்? பார்ப்பான் சங்கதி எடுத்ததெல்லாம் புரட்டாயிருக்கின்றது. அவன் சொல்வதெல்லாம் புழுகாயிருக்கின்றது. இதை வெளிப்படுத்த முடியாது என்கின்றாயே உனக்கு என்ன அவனிடத்தில் அவ்வளவு பயம்?

குருவி—எனக்கு பயம் ஒன்றுமில்லை, நீ பார்ப்பனத் தந்திரத்தை சரியாய் உணரவில்லை, தெரிந்திருந்தால் இவ்வளவு லேசாக அவனை மதித்திருக்க மாட்டாய்.

காக்கை—சரி நீ உணர்ந்த விஷயத்தைத்தான் சொல்லு பார்ப்போம்.

குருவி—சொல்லட்டுமா?

காக்கை—சொல்லு, சொல்லு.

குருவி—முதலாவது, பார்ப்பான் எந்த விஷயத்தைச் சொல்ல வந்தாலும் 'அது உன் கண்ணுக்கும் மனதுக்கும் அறிவுக்கும் எட்டாதது' இந்த லோகத்தில் பிரத்தியக்ஷத்தில் கண்டுபிடிக்கக் கூடியதாகவோ இப்போது நடந்ததாகவோ எந்த விஷயத்தையும் அவன் சொல்லி சிக்கிக் கொள்ளாமல் அவன் எது சொன்னாலும் மேல் ஏழு லோகத்தில் உண்டு என்றும் கீழ் ஏழு லோகத்தில் உண்டு என்றும்தான் சொல்வான் 'கண்ணுக்குத் தெரியாத சூக்ஷும சரீரத்தோடு இருக்கின்றார்கள்' என்றுதான் சொல்லுவான்.

'போன யுகத்தில் நடந்தது, அதற்கு முந்தின யுகத்தில் நடந்தது, பிரளய காலத்தில் நடந்தது' என்றுதான் சொல்லுவான். 'அசரீரியாய் சொல்லிற்று, மாயாரூபியாய் இருந்தது' என்றுதான் சொல்லுவான். 'நம்பினால்தான் உண்டு நம்பாவிட்டால் பாவம்' என்று சொல்லுவான். இவைகளில் நீ எதைக்கண்டு பிடித்து பார்ப்பானைப் பொய்யன் என்று சொல்லிவிட முடியும்? சொல்லு பார்ப்போம்.

காக்கை—நீ சொல்லுவது ஒரு விதத்தில் வாஸ்தவம்தான். அதனாலேயே எல்லாம் பொய் என்று சொல்லிவிட முடியுமா?

குருவி—அதுதான் நானும் சொல்லுகின்றேன், அதாவது பார்ப்பான் சொல்லுவதில் ஒன்றைக்கூட நீ பொய்யென்று ருஜுப்படுத்த முடியாது?

உதாரணமாக, இந்த உலகம் எத்தனையோ யோசனை தூரம் விஸ்திரணம் என்கின்றான். நீ எப்படி அளந்துபார்த்து தப்பு என்று சொல்ல முடியும்? எத்தனையோ மனுக்கள், பிர்மாக்கள், விஷ்ணுக்கள், சிவன்கள் பிறந்து இறந்தாய்விட்டது. ஒவ்வொருவருக்கு எத்தனையோ யுகங்கள் ஆயுள் என்று சொல்லுகின்றான். அதில் ஒரு வினாடி கம்மி என்று உன்னால் சொல்ல முடியுமா?

'எத்தனையோ சிரஞ்சீவிகள் இருக்கின்றார்கள். ஆனால் ஒருவரும் உன் கண்ணுக்கு தென்படமாட்டார்கள்' என்கின்றான். இவற்றுள் ஒரு சிரஞ்சீவியாவது இல்லை என்று உன்னால் சொல்ல முடியுமா?

நீ இதற்கு முன் இத்தனை ஆயிரம் ஜன்மம் எடுத்தாய்விட்டது. ஆனால் அது உனக்கு இப்போது தெரியாது என்று சொல்லுகின்றான். அதை நீ இல்லை என்று சொல்ல முடியாது.

'நீ எங்களுக்குக் கொடுக்கும் சிரார்த்தம் முதலியவைகளை உனது பிதுர்க்கள் சூக்ஷும சரீரத்துடன் வந்து பெற்றுப்போகின்றார்கள். ஆனால் அது உன் கண்ணுக்குத் தெரியாது' என்கின்றான். நீ அவற்றுள் ஒரு வகையாவது பொய்ச்சொல் என்று சொல்லி அவனிடம் தப்பித்துக்கொள்ள முடியுமா? சொல்லு பார்ப்போம்?

பார்ப்பனீயம் இத்தனை காலமாய் நமது நாட்டில் இருப்பதற்கு காரணமே இதுதானே. எதை எடுத்தாலும் உனக்குத் தெரியாது, உன் கண்களுக்குப் படாது, உன் புத்திக்கும் மனதுக்கும் எட்டாது, நீ அதைப்படிக்க அருகனல்ல, யுக்தி வாதங்களில் தர்க்கம் பண்ணுவது நாஸ்திகம், ஆகையால் பரீரம், இதெல்லாம் சோதனை, சிவன் பார்வதிக்குச் சொன்னார், சூதபுராணிகர் நைமிசாரண்ய வாசிகளுக்கு சொன்னார், சுகர் சொன்னார், ஜனமேஜயர் சொன்னார், பகவான் கீதையில் சொன்னார்', என்றே சொல்லுவார்கள். 'யார் சொன்னார்? எப்பொழுது சொன்னார்? யார் ஒண்டிக் கேட்டுக்கொண்டிருந்தது? உனக்கு எப்படித் தெரியும்? என்று கேட்டால், அது நாஸ்திகம் என்று சொல்லிவிடுகின்றான். நீயோ நாஸ்திகம் என்றால் நடுங்கிவிடுகின்றாய். பிறகு எப்படி நீ அவனை ஜெயிக்க முடியுமென்று சொல்லு பார்ப்போம்.

காக்கை—ஆமப்பா நீ சொல்லுவதெல்லாம் சரியாய்த்தான் இருக்கின்றது. மனுஷனை குண்டா முண்டா கட்டிப்போட்டு விடுகின்றான், ஒன்றை யாவது யோசித்துப் பார்ப்பதற்கு இடம் கொடுப்பதில்லை. ஆனாலும் பார்ப்பனர்கள் புத்திசாலிகள்தான் அதில் சந்தேகமில்லை.

குருவி—அவர்களை புத்திசாலிகள் என்றால் நான் ஒப்புக் கொள்ளமாட்டேன். தந்திரசாலிகள் என்று வேண்டுமானால் சொல்லிக்கொள்.

காக்கை—என் அப்படிச் சொல்லுகிறாய்? அவர்கள் புத்திசாலித்தனம் உனக்கு விளங்கவில்லையா?

குருவி—அவர்கள் புத்திசாலிகளா என்கின்ற விஷயத்தை சற்று கவனித்துப் பார். நீ எந்தப் புராணத்தையோ சாஸ்திரத்தையோ வேதத்தையோ வேண்டுமானாலும் எடுத்துக் கொண்டு நன்றாய் ஆராய்ச்சி செய்துபார். இமயமலைக்கு அப்புறம் அவர்கள் ஒன்று கூடத்தெரிந்து கொண்டிருப்பதாய்க் காணமுடியாது. அது மாத்திரமல்லாமல் பார்ப்பானுக்கு கைலாயமே இமயமலை தானே. அது பனிக்கட்டியில் மூடியிருப்பதால் அதை

வெள்ளியங்கிரி என்று சொல்லிவிட்டான். அந்தக் காலத்தில் அங்கு யாரும் போக முடியாமல் இருந்ததால் 'சிவன் அங்குதான் இருந்தான், உமை அந்த மலைக்குத்தான் பிறந்தாள், பிர்மா அங்கு தான், ரிஷிகள் அங்கு தான், தேவர்கள் அங்கு தான், சுவர்க்கம் அங்கு தான்' என்று எல்லாவற்றையும் அந்த மலையின் தலையிலேயே போட்டு விட்டான்.

அது மாத்திரமா? நதியைப்பார்த்தால் அது ஒரு தேவதை, சமுத்திரத்தைப் பார்த்தால் அது ஒரு தேவதை; மழை பெய்தால் அது ஒரு தேவதை, நெருப்பெரிந்தால் அது ஒரு தேவதை, சூரியன் ஒரு தேவதை, சந்திரன் ஒரு தேவதை, நட்சத்திரம் ஒவ்வொன்றும் தனித்தனி தேவதை, இது போலவே அந்தப்பயல்களுக்கு (சையன்ஸ்) விஞ்ஞான சாஸ்திரம் தெரியாததால் தொட்டதெல்லாம் தேவதை தேவதை என்று பேர்வைத்து ஒவ்வொன்றின் பேராலும் நம்ம தலையில் கையைவைத்து கொள்ளையடிக்க சவுகரியம் செய்துகொண்டான். அவன் முட்டாள் தனமும் அவனுக்கு உதவியாக இருக்கின்றது. ஆனால் நம்முடைய அறிவோ நமக்கு நாஸ்திகமாயும் எமனாகவும் இருக்கின்றது.

இதெல்லாம் கிடக்க, உன் தலையில் கையை வைத்திருப்பது உனக்குத் தெரியுமா? ஓ காக்கையே! நீ ஒரு காலத்தில் சீதையினுடைய முலைக்காம்பைக் கொத்தி விட்டாயாம். சீதையின் புருஷனாகிய இராமன் உன் கண்விழிகளில் ஒன்றைப் பிடுங்கிவிட்டானாம். அதனால் நீ ஒற்றைக்கண் குருடாய் இருக்கிறாயாம்; இக்கப்படி எழுதிவைத்திருக்கிறான் உன்பேரில் அவர்களுக்கு இருந்த கோபத்தினால், பெண்களிடம்கூட மரியாதை இல்லாமல் சீதை, ஒரு காக்கை வந்து கொத்தும்படி அவ்வளவு மெய் மறந்து தனது மார்பைக் காட்டிக் கொண்டு படுத்திருந்தாள் என்று எழுதியிருக்கின்றான். எனவே அவர்கள் சங்கதி சுலபத்தில் சரிப்படுத்தக்கூடியதல்ல.

காக்கை—நேரமாய் விட்டது. சாவகாசமாய் பேசிக்கொள்ளலாம்.

குருவி—சரி போய் வருகிறாயா.

## அனுதாபக் கூட்டம்

புதுக்கோட்டை முதலாவது நிர்வாகி ஜனாப் கான்பகதூர் பி. கலிபுல்லா அவர்களின் இரு குமாரர்கள் அகால மரணமடைந்ததற்கு அனுதாபம் தெரிவிக்க, அறிவு வளர்ச்சிக் கழகத்தின் ஆதரவில் வித்துவான் டி. ஒ நடராச பிள்ளை தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் 9-3-45-ந் தேதி கூடியது. பல தோழர்கள் பேசிய பின் ஒரு நிமிடம் மௌனமாகயிருந்து அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மதிப்புரைகள்:

## "பிரசண்ட விகடன்"

### பொங்கல் இதழ்

(கஜேந்திரன்)

பலதிறப்பட்ட கருத்து வேற்றுமை கொண்ட அறிஞர், எழுத்தாளர் பலரின் கட்டுரைகள் கதைகள் கொண்டு விளங்குகிறது.

'ஜீவா'வின் அழகாம்பிகை மனித உள்ளத்தின் தூய சக்தியாம் உண்மைக் காதலின் உயர்வை எடுத்தியம்புகிறது. தோழர்கள் கனி, குருசாமி பி. ஏ., ஆகியவர்கள் எழுத்தணிகளும் இதழைப் பொன்மயமாக்குகின்றன. எல்லாவற்றைக் காட்டிலும் திராவிடத் திருத்தந்தையார் வெண்தாடி வேந்தர் அவர்களின் 'தற்காலப் பிரச்சினை' ஆசிரியர் கூறுவதே போல் தெளிந்த நடையோடும், உணர்ச்சியூட்டக்கூடியதாகவும் அமைந்திருக்கிறது. ஜாதிசமயப் பிரிவினைகளை வேரறுத்து ஒவ்வொருவனும் தன் மதிப்போடு நானும் மனிதன் என்று தலை நிமிர்ந்து நடக்க பெரியார் அவர்களின் கட்டுரை வழிகாட்டுமாறு போல் பிரசண்டவிகடனுக்கும் ஆரியச் சேற்றிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு, திராவிடர் நலம் பேணி உழைக்க வழிகாட்டவேண்டும் என்பதே தன்மதிப்பு எழுத்தாளர் -தம் பேரவா!

'தற்காலப் பிரச்சினை'யை உரிய காலத்தில் நாட்டுக்கு நல்கிய பிரசண்ட விகடன் பொங்கல் இதழை நான் வரவேற்கின்றேன். குறைந்த விலையில், அதிகமான பக்கங்களுடன், சிறந்த கருத்துரைகளுடனும், கவிதைகளுடனும், தமிழறிந்தார் ஒவ்வொருவரும் படித்தற்குரியமைந்துள்ளது அவ்விதழ் என்றால் அது புனைந்துரையாகாது!

## சேலம் கல்லூரித் தமிழ்க் கழக ஆண்டுவிழா

3-3-45 சனிக்கிழமையன்று மாலை 6-30 மணிக்கு சேலம் கல்லூரிக் தமிழ்க் கழக ஆண்டுவிழா டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் M. A., Ph. D. அவர்கள் சீரிய தலைமையில் நடைபெற்றது. தலைவர் "தமிழ்க் காவியம்" என்னும் தலைமைப் பேருரையில், இன்று தமிழனது பண்பாட்டையும் நாகரிகத்தையும் விளக்கும் காவியமோ, தமிழனுடையது என்று கூறக் கூடிய நூலோ ஒன்றுகூடக் கிடையாது என்றும், ஆரிய நாகரிகக் கருத்துக்கள் தொல்காப்பியத்திலேகூட சிறிது காணப்படுகிறது என்றும், காவியம் என்ற தலைப்பில் குறைவான சூழல்களைக் கொண்ட நூல் "சிலப்பதிகாரமே" என்றும் எந்தப் பெரும் புலவனது நூலில் குற்றங்கள் காணப்படினும் அதை எடுத்துக் கண்டிப்பதே பகுத்தறிவுள்ள புலவனுடைய செயல் என்றும் மிக உணர்ச்சியோடு இரண்டு மணி நேரம் பேசினார்.

பேச்சுப் போட்டியிலும், கட்டுரைப் போட்டியிலும் வெற்றி பெற்றோருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. தோழர் வை. திருநாவுக்கரசு நன்றிகூற விழா இனிது முடிவடைந்தது.

## பாராட்டுக் கூட்டம்

விருத்தாசலம், பிப். 22—

திராவிடர் கழக உறுப்பினர்கள் தோழர் இளங்கோவன் (அரங்கபாஷ்யம்) இராவணன் (என். ராதா) இவர்கள் 10-2-45-ல் சென்னை மாகாண ஒலிம்பிக் பந்தயத்திற்குச் சென்றதில் வெற்றியோடு திரும்பினார்கள். இவர்களின் வெற்றி திராவிடர் வெற்றி. இதைப் பாராட்டுமுகத்தான் கழகச் செயலாளர் சி. முனுசாமி அவர்களால் ஓர் தேநீர் விருந்து தோழர் கே. நாராயணசாமி பிள்ளை அவர்கள் பி. ஏ., பி. எல்., அட்வகேட் தலைமையில் நடைபெற்றது.

## மணமக்களுக்குப் பாராட்டு

வடாற்காடு போளூர் தாலுகா திராவிடர் கழகத்தின் சார்பில் 7-2-45-ந் தேதி தோழர்கள் இராமசாமிக்கும், சகதம்மைக்கும் நடந்த திருமணத்தின் போது மணமகனார் இல்லத்தில் கழகப் பாராட்டுக் கூட்டம் நடந்தது.

## இறுதிச் சடங்கு

தோழர் என். ஜீவரத்தினம் குழந்தை கமலநாதன் 15-2-45ல் உயிர்நீத்ததை முன்னிட்டு, 25-2-45ல் காலை 9மணிக்கு பி. பி. ரோட் 153-வது இல்லத்தில் இறுதிச்சடங்கு நடைபெற்றது. தோழர்கள் மாசிலாமணி, ராஜீ, ஜெயசந்திரன் மற்றும்பலர் பேசினர். அன்று மாலை அதேபீடத்தில், கமலநாதன் இலவச வாசகசாலையை சென்னைமேயர் எம். இராதாகிருஷ்ணன், பி. ஏ. பி. எல். திறந்து வைத்தார். தோழர் என். ஜீவரத்தினம் நன்றிகூறினார்.

## விற்பனைக்கு

"குடி அரசு" பைண்டு வால்யூம்கள் விற்பனைக்குத் தயாராக இருக்கிறது. 4-வது வருட முதல் 13-வது வருடம் வரை (6-வது வருடம் நீங்கலாக) கிடைக்கும். ஒரு வருட வால்யூமின் விலை ரூ. 5—0—0. தபால் செலவு பிரத்யேகம். வால்யூமின் எடை அதிகமாக இருப்பதால், ரயில் பார்சல் மூலம் வரவழைத்துக் கொள்ள சௌகரியமுள்ளவர்கள் ஆர்டர் கொடுப்பது நலம்.

"குடி அரசு" பதிப்பகம்,

ஈரோடு.

# "பொது மேடையில் — பதில் சொல்ல முடியாது"

★

## கேள்விகளுக்கு சர் ஷண்முகம் பதில்

(ஒரு நிருபர்)

திருச்சி, மார்ச். 20—

நேற்று மாலை 6-மணிக்கு திருச்சி முனிசிபல் பள்ளிக் ஹாலில் நடந்த திருச்சி சிட்டி அமெச்சூர்வின் 11வது ஆண்டுவிழாவிற்கு தலைமைவகித்த சர் ஆர். கே. சண்முகம் செட்டியார் முகவுரை பேச ஆரம்பித்ததும் கேள்வித்தாள் ஒன்று அளிக்கப்பட்டது. (கேள்விகள் பள்ளிக்கூட சரித்திர வினாத்தாளின் மறுபக்கத்தில் கையினால் எழுதப்பட்டிருந்தன)

தலைவர் முடிவுரை பேச ஆரம்பித்ததும் கூட்டத்தினர் கேள்விகளுக்குப் பதில் கூறும்படி தலைவரைக் கேட்டனர்.

தலைவர்: எது கேள்விகள்?

கூட்டத்தினர்: உங்களிடம் சற்று முன்பு கொடுத்த கேள்விகள்தான்.

தலைவர் கேள்வித்தாளை கையில் எடுத்து சில நிமிஷங்கள் மௌனமாக நின்றார். அதுசமயம் தோழர் கி. ஆ. பெ. விசுவநாதம் எழுந்து பதில் கூறவந்தார். கூட்டத்தினர், தலைவர் பதில் சொல்ல வேண்டும் என்று கூச்சலிட்டனர்.

தலைவர்: எப்படிப்பட்ட கேள்விகள்? கலை சம்பந்தமானவைகளா?

கூட்டத்தினர்: படித்துப் பாருங்கள்; புரியும்.

தலைவர்: நீங்கள் தானே எழுதினீர்கள்! சொல்லுங்கள்.

கூட்டத்தினர்: படித்துப்பாருங்கள்.

தலைவர்: பேசாது நின்றுகொண்டிருந்தார்.

கூட்டத்தினர்: பதில்! பதில்!

தலைவர் கலை சம்பந்தமான கேள்வியானால் பதில் சொல்லமுடியும்.

கூட்டத்தினர்: நேதி சொல்லுங்கள், விவாதம் வைத்துக்கொள்வோம்.

தலைவர்: (பதில் இல்லை)

பின் கொடுத்த கேள்விகளைப் படிக்க ஆரம்பித்தார். தோழர் விசுவநாதம் வேண்டாம் என்று தடுத்தார். தலைவர் மீறிக்கொண்டு படிக்க ஆரம்பித்து அச்சடிக்கப்பட்ட சரித்திரக் கேள்விகளைப் படித்துவிட்டு அவை சம்பந்தமில்லாதவை என்றும் கேள்வி கேட்டவர்களை கையாண்டி செய்ய ஆரம்பித்தார். பின்னர், தாளின் மறுபக்கத்தில் கையினால் எழுதப்பட்ட கேள்விகளைப் படித்துவிட்டு இவைகளில் இரண்டு சம்பந்தமற்றவையென்றும், இங்கு கேட்பது மரியாதையல்ல என்றும், இவைகளுக்குப் பொது மேடையில் பதில் கூற முடியாதென்றும் கூறி முடிவுரை கூறாது கூட்டத்தை முடித்தார்.

"சண்முகம் ஒழிக", "ஆரிய அடிவருடி ஒழிக" "பெரியார் வாழ்க" என்ற ஒலியுடன் கூட்டம் கலைந்தது.

### கேள்விகள்

1. திராவிடர் கழகத்தில் நீங்கள் சேராததற்குக் காரணம் சுயநலமா? கொள்கை பிடிக்காததாலா? அல்லது தலைவர் மேல் நம்பிக்கையில்லாததாலா?

2. "சர்" பட்டத்தை விட்டுவிட்டால் மக்கள் மதிப்பால் உயரலாம் என்ற எண்ணம் இன்னும் உங்களுக்கு உண்டாகவில்லையா? அல்லது சர்க்கார் பதவி எதாவது காத்திருக்கிறதா?

3 "திராவிடர் கழகம்" எனப்பெயர் மாற்றத்தில் தவறென்ன?

4 "மதத்தாலும், மொழியாலும் ஒற்றுமை உண்டாகாது. ஆகையினால் நாட்டைத் துண்டாடத்தான் வேண்டும்" என்று ஈரோட்டில் கூறிய நீங்கள் சென்னையில் முற்றிலும் மாறாகப் பேசியிருப்பதேன்?

---

## சாமல்பட்டி கொலை வழக்கு

### எதிரிக்கு விடுதலை

சேலம் ஜில்லா, சாமல்பட்டி கிராம சையத் காதர் என்பவன் மீது தொடரப்பட்ட கொலை வழக்கில் சேலம் அடிஷனல் செஷன்ஸ் நீதிபதி தோழர் பி. டி. ராமன் நாயர் அவர்கள் எதிரியை விடுதலை செய்துவிட்டார். எதிரி தரப்பில் திருப்பத்தூர் வக்கீல் ஜி. சாமி நாயுடு பி. ஏ., பி. எல்., அவர்களும், இ. எல். ராகவ முதலியார் பி. ஏ., பி. எல்., அவர்களும், போலீஸ் தரப்பில் சேலம் உதவி பப்ளிக் பிராசிகூட்டர் அவர்களும் ஆஜராயிருந்தார்கள்.

---

## மணமகள் தேவை

தேவாங்க ஜாதி 8-வது வரையிலும் படித்து மாதம் 30 ரூபாயிருக்குக் குறையாத வருமானமுள்ள நெசவுத் தொழில் செய்யும் 20-வயதுள்ள சி. என். அருணாசலம் என்பவருக்குத் தேவாங்ககுலப் பெண் தேவை. எல்லா விபரங்களுக்கும்,

C. N அருணாசலம்,
8/341 சொமாமுத்துச்சாமி
செட்டி தெரு,
அம்மாப்பேட்டை, சேலம் டவுன்.

## விவசாய வருமானத்திற்கு வரி

### சென்னை சர்க்காரின் மசோதா

சென்னை மாகாணத்தில் விவசாயிகளின் வருமானத்திற்கு வரி விதிப்பதென்று தீர்மானித்த தங்கள் உத்தேசங்களை ஒரு மசோதா ரூபமாக மாகாண சர்க்கார் வெளியிட்டிருக்கிறார். அதன் சாரம் வருமாறு:

44-45-ல் கிடைக்கும் விவசாய லாபங்களுக்கு 45-46-ல் வரி வசூலிக்கப்படும்.

சாகுபடிச் செலவு, நிலத்தீர்வை, குத்தகை, அடமானக் கடன் வட்டி, இன்ஷ்யூரன்ஸ் பிரீமியம் முதலியவற்றைக் கழித்தே மொத்த வருமானம் கணக்கிடப்படும்.

ரூ. 1500 வரையிலுள்ள மொத்த விவசாய வருமானத்துக்கு வரி இல்லை

அடுத்த ரூ. 3500 வருமானத்துக்கு 9 தம்படி விகிதமும், அடுத்த ரூ. 5000-க்கு வருமானத்துக்கு 1 அணா விகிதமும், அடுத்த ரூ 5000 வருமானத்துக்கு 1½ அணா விகிதமும், அடுத்த ரூ 5000 வருமானத்துக்கு 2 அணா விகிதமும், மிச்சமுள்ள வருமானத்துக்கு 2½ அணா விகிதமும் வரி விதிக்கப்படும்.

சகோதரர்கள் மட்டும் அல்லது சகோதரர்களும், சகோதரர் புத்திரர்களும் உள்ள குடும்பங்கள் விஷயத்தில் அல்லது மருமக்கத்தாயம் தாவாட் அல்லது அலியசந்தான குடும்ப விஷயத்தில் பின் வருமாறு வரி விதிக்கப்படும்:-

ரூ. 3500க்கு அதிகப்படாத வருமானங்களுக்கு 4 தம்படி விகிதமும், ரூ. 3500-க்கு மேல் ரூ. 6000 வரை 7 தம்படி விகிதமும், ரூ. 6000க்கு மேல் தனி நபர் விகிதாசாரத்தில் சராசரி விகிதப்படியும், கம்பெனிகளுக்கு மொத்த வருமானத்தில் ரூபாய்க்கு 2 அணா விகிதமும் வரி வசூலிக்கப்படும்.

## ஈரோட்டில் 'நபிகள் நாயகம்' நாள்

சீரத் கமிட்டி ஆதரவில் 12-3-46 இரவு 10 மணிக்கு ஒப்பணக்கார தெரு மதரஸா முன் அமைக்கப்பட்ட பந்தலில் ஈரோடு ஜில்லா முன்சீப் ஜனாப் எம். எஸ். அப்துல் அஜீஸ் சாயபு பகதூர் தலைமையில் "நபிகள் நாயகம்" பிறந்த நாள் கொண்டாட்டம் நடந்தது. ஈரோடு நகரசபைத் தலைவர், ஜம்பை இப்ராஹிம், குடந்தை முகம்மது இப்ராஹிம் சாயபு, பி. ஷண்முக வேலாயுதம், ஈ. வெ. கி. சம்பத், பண்டிட் ஜயலக்ஷ்மி முதலியவர்கள் நபிகளின் வாழ்க்கை வரலாறு பற்றி விளக்கினர்.

ரோஜா முத்தையா

# நமது வேலை?

"நாடு நகரம் பட்டி தொட்டி எல்லாம் தன்மானக் குரலெழுப்புங்கள்......... வாருங்கள் போர் முனைக்கு வந்து வரிந்துகட்டி நில்லுங்கள்" என பெரியாரவர்கள் மாணவர்களைச் சென்ற கோடை விடுமுறையில் அழைத்தார்கள்.

தளபதி அண்ணாதுரை அவர்கள் நாட்டிற்கும் மக்களுக்கும் கலைக்கும் கடவுளுக்கும் "நல்ல தீர்ப்பு" கூற பண்டிதர்களை அழைக்கவில்லை பட்டதாரிகளை அழைக்கவில்லை அண்ணாமலை இருந்தவக் கல்லூரியில் மாணவர்களை அழைத்துள்ளார்கள்.

"சுதந்தரம்! சுதந்தரம்!" என்று கூவுவதில் பயனில்லை. "அக்கா வந்து கொடுக்க சுக்கா, மிளகா சுதந்தரம்" என்றார் உயிர்க் கவி பாரதிதாசன்.

மதிப்புமிக்க மாணவத்தோழர்களே!

நீங்கள் என்னசெய்யப்போகிறீர்கள்? பெரியாரவர்கள், "மாணவர்களே உங்களைத்தவிர இந்த கேடுகெட்டநாட்டை, இழிவுபட்ட இனத்தை மேம்படுத்த யார் இருக்கிறார்கள்?" என்று திருச்சி வடமண்டல மாநாட்டிலே கூறியதை சிந்தித்துப்பாருங்கள். தம் தள்ளாத வயதில் உடல் நலங்குன்றியுள்ள இந்த நேரத்திலும் கூட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் அவர்களே செல்ல எதிர்பார்க்கிறீர்களா? அல்லது சில மாநாடுகளுடன் தமது சுற்றுசெலவை நிறுத்தி ஓய்வு எடுத்துக்கொள்ளச்செய்ய முன்வரவேண்டியது இன்றைய நமது முதற்கடன் என்று கருதுகிறீர்களா?

சென்ற ஆண்டு கோடை விடுமுறையிலும், இவ்வாண்டு தசரா விடுமுறையிலும் நமது தோழர்கள் நாடு சுற்றி நம் இயக்கக் கருத்துக்களை விளக்கி, பல ஆரியக் கோட்டைகளை அசைத்துச்செய்து, திராவிடரைத் தட்டியெழுப்பி நல்ல பணி செய்தார்கள். இதுவன்றி பல ஊர்களில் பல மாவட்ட மாநாடுகளும், மண்டல மாநாடும் நமது திராவிட மாணவர்கள் நடத்தினார்கள். ஏனைய மாணவ இயக்கங்களில் நமது மாணவர்கள் முன்போல் ஏமாற்றப்பட்டுக் கைப்பாவையாய் உபயோகப்படுத்தல் குறைந்துவருகிறது, நமது மாணவர்களிடை ஏற்பட்டுள்ள இன உணர்ச்சியின் காரணமாக.

சென்ற சுற்றுப் பிரயாணங்களில் கலந்து கொண்ட மாணவர்களும், புதிய மாணவர்களும் இம்முறை கலந்து கொண்டு இச் சுற்றுப்பிரயாணத்தை வெற்றிகரமாய் நடத்தவேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம். இம்முறை கலந்துகொள்ளும் மாணவர்கள் உடனே தங்கள் பள்ளியின் விடுமுறை ஆரம்ப நாளையும், விடுமுறை முடிவையும், பிற வசதிகளையும் எழுதியனுப்பக் கேட்டுக் கொள்கிறோம்.

இம்முறை சிறப்பாகச் சில மாணவிகள் சுற்றுப்பிரயாணத்தில் கலந்து கொள்ள தம் விருப்பத்தைத் தெரிவித்துள்ளார்கள்.

"நான் ஒரு சுயமரியாதைக்காரியாகவே வாழ்ந்து வருகிறேன்" என்று தோழர் கனகம்மையார் சென்னை சுயமரியாதை மாநாட்டிலே கூறியுள்ளார்கள். இதன் பொருளென்ன? பெண்களும் ஆண்களைப் போல் பொதுநலத் தொண்டிற்கு சமத்துவமாய் வரவேண்டுமென்பதல்லவா? ஆதலால் மேலும் சுற்றுப்பிரயாணத்தில் கலந்துகொள்ள விரும்பும் மாணவிகளும் எழுதியனுப்பக் கோருகிறோம்.

பெரியாரவர்கள் ஓய்வு எடுக்கவேண்டியிருப்பதால் கடமையுணர்ந்த மாணவர்கள் கட்டாயம் வருவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

செயலாற்றும் செம்மல்களே வருக! வருக!!

செயலாளர்,
திராவிட மாணவர் பிரசாரக் கழகம்,
ஈரோடு.

o o

திராவிடப் பெருமக்களே!

சென்ற விடுமுறையில் தங்கள் ஊர்களுக்கு மாணவர்களை அழைத்து கூட்டங்கள் ஏற்பாடு செய்தும் அவர்களுக்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுத்தமைக்கும் மீண்டும் எங்கள் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு இம்முறையும் தங்கள் அழைப்புகளை உடனே அனுப்பியதவக் கேட்டுக் கொள்கிறோம். இம்முறை இரண்டு மாதங்களுக்கு நகரங்களிலும், கிராமங்களிலும்கூட்டங்கள் ஏற்பாடு செய்து எழுதும்படியாய் கேட்டுக்கொள்கிறோம்.

o o

பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுடைய புகைப்படம் (ஒரிஜனல்) எந்த அளவில் வேண்டுமாயினும் அழகிய அச்சிட்ட மவுண்டுடன் கிடைக்கும்.

விலை விபரம் தேவையானவர்கள் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்,
திராவிடமாணவர் பிரசாரகழகம், ஈரோடு.

## ஈரோட்டில் செல்வம் நாள்

ஈரோட்டில், செல்வம் நாள் 29-3-45-ஆம் நாள் நடைபெறும்; தோழர் C.N. அண்ணாதுரை M.A. அவர்களும் மற்றும் பலரும் சொற்பொழிவாற்றுவார்கள்.

P. பழனிச்சாமி, S. R. சந்தானம்,
செயலாளர்கள்
கோவை மாவட்ட திராவிடர் கழகம்.

குறிப்பு: அதே தேதியில் இசைப் போட்டியும் நடைபெறும்.

## இக்பால் இளைஞர் சங்கம்

புதுக்கோட்டை: 13-3-45ந் தேதி ஜனாப் என். கே. ஹபீப்முகம்மது ராவுத்தர் தலைமையில் கூடிய அச்சங்கத்தின் 5-வது ஆண்டுவிழாவை ஏப்ரல் மாதக் கடைசி வாரத்தில் நடத்துவதென்றும், தலைமைவகிக்க சர் ஆர். கே. ஷண்முகம் செட்டியாரவர்களையும்: சொற்பொழிவாற்றதோழர்கள் சி. என். அண்ணாதுரை, அத்துக்குடி ஷேக் இபுராகிம் சாயபு, மதுரை முகம்மது இஸ்மாயில் சாயபு, திருச்சி எ. கே. பாஷா, காரைக்குடி நீலாவதி சுப்ரமணியம் அம்மையார் முதலியவர்களை கேட்டுக்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சித்திரைப் பள்ளிக்கூடம்

1945 ஏப்ரல் மாதம் 20ம் தேதியிலிருந்து 6 வாரங்கள் வகுப்புக்கள் நடைபெறும். படிப்பை மத்தியில் நிறுத்தியவர்களும், ஏற்கனவே ஸ்கூலில் படிக்காதவர்களும் இவ்வகுப்பில் சேர்ந்து படிக்கலாம். அவசியப் பாடங்கள் குறுகிய கால அளவில் சொல்லிக்கொடுக்கப்படும். தங்க இடமும் படிப்பும் செலவில்லாமல் கிடைக்கும். சாப்பாட்டுச் செலவு சுமார் ரூ. 20/– ஆகலாம். சேர விரும்புகிறவர்கள் ஏப்ரல் மாதம் 10ம் தேதிக்குள் பல்கலைக் கழகத்துக்கு மனுச்செய்து கொள்ளலாம்.

## ஈரோட்டில் சோளம்

### பொது மக்கள் முறையீடு

ஈரோட்டில் அரிசியுடன், சோளம் போட்டு வருவதில் உளுத்துப் போன சோளம் போடுவதைக் கண்டித்து 52 சங்கங்களின் யூனியன் சார்பாக ஈரோடு டவுன் எலிமெண்டரி ஸ்கூலில் தோழர் எம். மாணிக்கவாசகம் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எம். ஏ. ஈஸ்வரன், பி. ஷண்முகவேலாயுதம், ஈ. ஜி. கோவிந்தசாமி, ஆர். சி. கிருஷ்ணன், சினிவாசன், ஈ. ஆர். முத்து, எல். தவமணிராசன், யூசப் சாபு, அப்பாவு, கெ. யு. கிருஷ்ணன் ஆகியவர்கள் பேசினார்கள். உளுத்துப்போன சோளத்திற்குப் பதிலாக நல்ல சோளம் போடும்படி சர்க்காரைக் கேட்டுக் கொள்வதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தோழர் எஸ். பி. வெங்கடாசலம் வந்தனோபசாரம்கூற கூட்டம் முடிந்தது.

மறுநாள் (19-3-45) ஒரு தூது கோஷ்டி ஈரோடு ரேஷனிங் ஆபீசர் அவர்களைப் பேட்டி கண்டு குறைகளை எடுத்துரைத்தார்கள். நல்ல சோளம் போடுவதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்து வருவதாகவும், சோளம் வாங்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லையென்றும், ஒருவார ரேஷனில் ஆறில் இரண்டு பங்கு சோளமோ கோதுமையோ வாங்கிக்கொள்ளலாம் என்றும், சோளத்தின் ரேஷனின் அளவை சிறிது அதாவது கால் 'யூனிட்' அதிகரிக்கச் சர்க்காருக்கு சிபார்சு செய்வதாகவும் பங்கீடு அதிகாரி கூறினார்.

பங்கீடு அதிகாரி கூறியதை விளக்கி வளையக்காரத் தெருவிலும், கைக்கோளந் தோட்டத்திலும் விளக்கப்பட்டது.

அஜாக்கிரதையாகப் பேசுவதை
நிறுத்தி
போராடும் நமது வீரர்களுக்கு
பாதுகாப்பளியுங்கள்

★

"துருப்புகளின் சௌகரியத்திற்கு"
என்று
குறிப்பிட்டு

மே. த. கவர்னர்
யுத்த நிதிக்கு
மீண்டும் பணம் கொடுத்துதவி
அவர்களுக்கு நலன்
தேடுங்கள்.

## நபிகள் பிறந்தநாள் விழா

### இந்து மதத்திற்கு இடி!

சிதம்பரம் செட்டியார் பள்ளி மைதானத்தில் 26-2-45 திங்கள் மாலை நபிகள் பிறந்தநாள் விழா மாநாடாக பெருங்கூட்டத்துடன் சிறப்பாய் நடந்தது. கூத்தாநல்லூர் ஆலி ஜனாப் மௌலானா மவுல்வி எஸ். எ. மகமத் அலி சாகிபு தலைமையில் சில சொற்பொழிவுகள் நடந்தபின், பகுத்தறிவுப் புலவர் தோழர் முருகேசனார் முகமதிய மதத்தையும் மற்ற மதங்களையும் ஒப்பிட்டுச் சிறப்பிக்கும்போது இந்து மதத்தில் சமரசம் சமத்துவமில்லாத இழி தன்மையிருப்பதாக விளக்கினார். இதைப் பொறாத பார்ப்பன வழக்கறிஞர் ஒருவர் இந்து மதத்தைப் பற்றியெல்லாம் பேசவேண்டாம் என்று கூவிக்கொண்டே கூட்டத்தை விட்டு ஓட்டம்பிடித்தார். கடைசியாக வந்த பேச்சாளர் காஞ்சி தோழர் கல்யாணசுந்தரனாரவர்களும், "ஐயாவர்களுக்கு விடையாக நாங்கள் இந்துவாயிருந்தால் முஸ்லீம் கூட்டத்தும் மா உலகத்திலும்கூட எங்கள் உரிமையை தடுப்பீர்கள் என்றுமான், நாங்கள்— தமிழர்கள் திருந்திட மதம் கண்டோம்; உங்கள் ஆக்கினை எங்களிடம் இனி செலுத்தாதீர்" என்பதாகப் பேசினார். இரவு 11 மணி வரை விழா இனிது நடந்தேறியது.

## பிறப்பு

கரூர்.

19-2-45 திங்கள்கிழமை தோழர் எஸ். திராவிடமுத்து வாழ்க்கைத் துணைவியார் பழனியம்மாளுக்கு ஒரு ஆண் மகவு பிறந்து வீரமணி என்று பெயரிடப்பட்டது. இதன் ஞாபகமாக 'குடி அரசு' 'திராவிடநாடு' பத்திரிகைகளுக்கு முறையே ஒவ்வொரு ரூபாயும், கரூர் திராவிடர் கழகத்திற்கு 1 ரூபாயும், கட்டிட நிதிக்கு ரூ. 2-ம் கொடுக்கப்பட்டது.

குடி அரசு

1945-ஆம் மார்ச்சு௴ 24உ

# வரவேற்கிறோம்

சென்னை அரசாங்கம் விவசாய வரும்படிக்கு வருமான வரி போட உத்தேசித்து அதற்கேற்றபடி சட்டமியற்ற முன்வந்து நகல் சட்டத்தை கெஜட்டில் பிரசுரித்திருக்கிறது. அது 21ந் தேதி தினசரி பத்திரிகைகளிலும் வெளிவந்திருக்கிறது. திட்டங்களில் சில மாறுதல்கள் செய்யவேண்டி இருப்பினும் அதன் தத்துவத்தை நாம் மனப்பூர்வமாக வரவேற்கிறோம்.

விவசாய வருமானத்திற்கும் வர்த்தக, லேவாதேவி முதலிய வருமானங்களைப்போல் வருமானவரி விதிக்கவேண்டுமென்று 1930-ம் வருடம் முதல் நாம் எழுதி வருவதோடு பல நம் மாநாடுகளிலும் தீர்மானங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அன்றியும் பெரியாரும் டாக்டர் ராஜகோபாலாச்சாரியாரும் கோயமுத்தூர் சிறையில் (1934ம் வருஷத்தில்) ஒன்றாக இருக்க நேர்ந்த காலத்தில் எதிர்கால அரசியல் திட்டம் எப்படி இருந்தால் நலமாகஇருக்கும் என்று யோசித்து முடிவு செய்யப்பட்ட திட்டங்களில் விவசாய வரும்படிக்கும் வருமான வரி போடவேண்டியது அவசியம் என்று கருதப்பட்டிருப்பதும் அப்போதே வெளியிடப்பட்டதாகும். அன்றியும் இதை அனுசரித்தே பெரியார் 1934ல் சிறையிலிருந்து வெளிவந்த உடன் சென்னை விக்டோரியா பப்ளிக் ஹாலில் பொப்பிலி அரசர் அவர்கள் தலைமையில் கூடிய ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டில் பெரியார் பிரரேபித்த தீர்மானங்கள் பலவற்றில் ஒன்றாக இந்தத் தீர்மானமும் பிரரேபிக்கப்பட்டு அக்கொள்கையை மொத்தத்தில் அம்மாநாட்டிலேயே ஒப்புக்கொண்டதுமாகும். பின்பும் அன்று முதல் இன்றுவரை ஜஸ்டிஸ் கட்சியாரின் அரசியல் திட்டங்களில் ஒன்றாக இது இருந்து வரும் திட்டமுமாகும்.

அன்றியும் காங்கிரஸ் மந்திரி ஆட்சியில் அதாவது டாக்டர் ஆச்சாரியார் முதன் மந்திரியாயிருந்து நடத்தப்பட்ட ஆட்சிக்காலத்திலும் இந்த அதாவது விவசாய வருமானத்திற்கு வருமான வரிபோடும் முறையை அமலுக்குக்கொண்டுவர வேண்டும் என்று முயற்சித்த திட்டமுமாகும். இவ்வளவும் தவிர இந்த விவசாய வருமான வரி முறை (சட்டம்) என்பது இந்திய கண்டத்துக்குள் அஸ்ஸாம், பீகார் என்கின்ற மாகாணங்களில் அமுலில் இருந்து வருவதுடன் கூடிய சீக்கிரத்தில் வங்காள மாகாணத்திலும் ஏற்பாடு செய்ய சென்னை மாகாணம் போல் இவ்வருஷத்திலேயே ஒரு நகல் திட்டம் (சட்டம்) பிரசுரிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. அன்றியும் நமது மாகாணத்தைச் சேர்ந்த சுதேச சமஸ்தானமாகிய திருவாங்கூர் இராஜ்ஜியத்திலும் இன்று இந்த விவசாய வருமான வரி அமுலில் இருப்பதுமாகும்.

ஆகவே இந்த எடுத்துக்காட்டுகளால் விவசாய வருமான வரித்திட்டம் திடீரென்று வந்த ஒரு புது வெடியோ அல்லது வேறு எங்குமில்லாத புதுமுறையோ என்று சொல்லிவிட முடியாது.

அன்றியும் இந்த வரி விதிப்பை நாம் ஆதரிப்பதின் முக்கிய கருத்து என்னவென்றால் கொஞ்சம் பூமி வைத்துக்கொண்டு சொந்த வெள்ளாமை செய்கின்ற சிறிய அதாவது, குடும்பச் செலவுக்கே போதுமானதாக இல்லாத விவசாயிகளுக்குக் கூடுமான வரை வரிப் பளுவு இல்லாமலே இருக்கும்படி செய்ய வேண்டும் என்பதேயாகும்.

அன்றியும் இந்த விவசாய வருமான வரியால் வரும் வருமானத்தைக் கொண்டு விவசாய தொழிலாளிகளுக்கு மற்ற மக்களைப் போன்றதான சவுகரியங்கள் அனுபவிக்கும்படியான காரியங்கள் செய்ய வேண்டியதற்காகவுமாகும்.

இந்த சர்க்காரோ அல்லது (பதவிக்கு வந்தால்) காங்கிரஸ் சர்க்காரோ இந்தக் காரியங்களைச் சரியாகச் செய்யுமோ இல்லையோ என்பது சந்தேகப்படக்கூடியதே; ஆனாலும், இவர்கள் இந்த வரிகள் விதித்து சட்டங்களை ஏற்பாடு செய்துவிட்டுப் போய்விடுமேயானால், அல்லது ஏற்பாடு செய்துவிடுமேயானால் பிறகு வரும் திராவிடர் (சர்க்கார்) ஆட்சியில் இந்தக் காரியங்கள் தக்கபடி செய்யப்பட்டுவிடும் என்பது நமது உறுதி.

இன்று நம் நாட்டில் ஆரிய ஆட்சி இருப்பதால் தொழிலாளர்—பாட்டாளி—உடலுழைப்பு மக்களுக்கு எவ்வித நலனும் கண்டிப்பாய் செய்யப்பட முடியவே முடியாது, செய்யவும் அவ்வாட்சி இடம் கொடுக்காது. நம் நாட்டுப் பணக்காரர்களும் கூட ஏழையாய் இருக்கும்வரைதான் தாம் ஆரியனோ திராவிடனோ என்று சந்தேகப்படுவார்கள். அப்படிப்பட்டவர்கள் பணக்காரனாக ஆகிவிட்டாலும் அல்லது பணக்காரக்கூட்டத்தில் சேர்ந்துவிட்டாலும் உடனே தம்மை ஆரியன் என்றே கருதிக்கொள்ளுகிறார்கள். யாராவது அப்படிக் கருதிக்கொள்ள சிறிது கூச்சப்பட்டாலும் "ஆரியனானாலும் திராவிடனானாலும், எல்லாம் ஒன்றாய்விட்டது" என்று சொல்லி ஆரம்பித்து ஆரிய சமயம், கலை, வழிபாடு முதலியவைகளுக்கு அடிமையாய் இருப்பதை பெருமையாய்க் கருதுகிறார்கள். ஆதலால் நம் நாட்டில் செல்வவான்களை திருந்தச்செய்ய வேண்டுமானால் இன்னும் இப்படி பல வரிகளைப்போட்டு பெரும் பணங்களை சர்க்காருக்கு வருவாயாக்கி சர்க்காராக்கிக்கொண்டு செல்வவான் பாட்டாளி என்று இல்லாமல் யாவருக்கும் ஒன்றுபோல் பயன் ஏற்படும்படியான நிர்வாகம் நடத்தப்படவேண்டும்.

மற்றும் ரயில்போக்குவரத்துக்களை சர்க்கார் நடத்துவது போலவே, மோட்டார் பஸ் போக்குவரத்துகளையும் அடியோடு சர்க்கார் எடுத்துக்கொள்ளவேண்டும். அல்லது அதன் வரும்படிகளில் 100க்கு 75 பாகம் சர்க்காருக்குக் கிடைக்கும்படி சட்டம் செய்ய வேண்டும்.

அதுபோலவே நம் நாட்டில் நடைபெறும் யந்திரசாலைகள் முழுவதும் சர்க்காருக்கு (பொது மக்களுக்கு)ச் சொந்தமானதாக ஆக்கப்படவேண்டும்.

லேவாதேவியையும் கட்டுப்படுத்திவிட வேண்டும்; வர்த்தகத்தையும் கட்டுப்படுத்தி இவைகளை

# திராவிடர் கழகத்திற்கு

## (ஜஸ்டிஸ் கட்சிக்கு)

**24-3-45ந் தேதி வரை 30121 அங்கத்தினர்கள்**

**ரூ. 2983—0—0 சந்தா**

மார்ச்சு மாதம் 24ந் தேதி வரை திராவிட கழகத்திற் (ஜஸ்டிஸ் கட்சிக்)கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்து அங்கத்தினர் சேர்த்து தலைமை காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் அங்கத்தினர் ரசீதுகளின் எண்ணிக்கையும் அவைகளுக்காக வசூலான சந்தா தொகையும் கீழே குறிப்பிட்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. கோவை | 5139 | 9. வட ஆற்காடு | 1571 |
| 2. தஞ்சை | 5018 | 10. மதுரை | 1353 |
| 3. சேலம் | 4460 | 11. செங்கல்பட்டு | 760 |
| 4. திருச்சி | 3886 | 12. திருவிதாங்கூர், (நாஞ்சிநாடு) | 168 |
| 5. இராமநாதபுரம் | 2035 | | |
| 6. திருநெல்வேலி | 2011 | 13. இலங்கை | 165 |
| 7. சென்னை | 1700 | 14 பெங்களூர் | 158 |
| 8. தென் ஆற்காடு | 1638 | 15. புதுக்கோட்டை | 59 |

ஆகமொத்த அங்கத்தினர்கள் 30121. சந்தா ரூ 2983-0-0.

எல்லாம் லைசென்சுக்குள் (இப்போது யுத்த காலத்தில் இருப்பது போல்) கொண்டுவந்து பொது மக்களுக்குச் சரியான பலனும் அனுபவமும் இருக்கும்படி செய்யவேண்டும்.

திராவிடர் சமயம் என்பதும் திராவிடர் ஆட்சி என்பதும் இது தான்.

இவை அவ்வளவும் ஜஸ்டிஸ் கட்சித் திட்டத்தில் 10 வருஷமாகவும் சுயமரியாதை இயக்கத் திட்டத்தில் 18 வருஷ காலமாகவும் இருந்து வருபவைகளேயாகும்.

இந்த முறைகளால் தான் திராவிட மக்கள் மனிதத் தன்மையும் மான உணர்ச்சி வாழ்க்கையும் அடைய முடியுமே ஒழிய மற்றபடி யாரோ சில திராவிடர்கள் லட்சாதிபதிகளாவதும், கோடீஸ்வரர்களாவதும், ராஜாக்கள், சர்கள், பெரிய பெரிய பதவி ஆனர்கள் ஆவதும், உத்தியோகஸ்தர்களாவதுமான காரியங்களால் திராவிடர்கள் நிலை, [illegible] அளவும் உயராது என்பதோடு இவற்றால் ஆரிய கோவில்களும், கலைகளும், சடங்குகளும், ஆரியர்களுக்கு மற்ற திராவிடர்களை அடிமையாக்கும் அநேகக் காரியங்களும் வளர்ந்து கொண்டும் தான் போகும் என்று கூறுவோம்.

இவைகள் மாத்திரமல்லாமல், ஜலக்கிரீடை கோபிகாலீலை ஜமீன்தார்களின் இன்றைய வாழ்வுக்கும் சாவு மணி அடிக்கப்படவேண்டியது மிகவும் அவசியமாகும். அவர்களில் அநேகர்களின் வாழ்வு பூ பாரம்—பூமிக்குப் பாரம் என்பதல்லாமல் திராவிட மக்களுக்கு வேறு என்ன காரியத்திற்குப் பயன்படுகின்றது என்பது நமக்கு விளங்கவில்லை. நமக்குத்தான் விளங்கவில்லை என்றால் அவர்களுக்காவது (ஜமீன்தார்களுக்கு ஆவது) விளங்குகிறதா என்றால் அதுவும் ஒரு விடுகதை போன்றதுதான். ஆதலால் அவர்களையும் 'ஆர்க்காடு நவாபுகள்' போல் ஆக்கி அந்த ஜமீன்களை சர்க்காருக்கு சேர்க்கவேண்டியது பொது மக்கள் ஆட்சி அல்லது திராவிட ஆட்சிக்கு மிகவும் அவசியமான காரியமாகும்.

பொதுவாகச் சொல்லவேண்டுமானால் இன்றைய மாதிரியான இராஜாக்களும், ஜமீன்தார்களும், கோடீஸ்வரர்களும் இருந்துவரும்படியான ஆட்சியும், கோவில்களும், மடங்களும், சத்திரங்களும், சங்கராச்சாரிகளும், மடாதிபதிகளும், சத்திரப்பதிகளும், அன்னதானப் பிரபுக்களும், அண்டமுட்டும் தேர்களும் இருந்து வரும் ஆட்சியும், காட்டுமிராண்டிகால ஆட்சி அல்லது கொள்ளைக்கூட்டத்தார் ஆட்சி என்றுதான் சொல்லவேண்டும்.

ஆகையால் இன்று சென்னை அரசாங்கத்தாரால் விவசாய வரும்படிக்கு வருமான வரி போட்டிருப்பதைக் கொள்கையளவில் மனதார வரவேற்பதோடு ஆரியர்கள் கூச்சலுக்கும் பணப்பிண்டங்களான மிராசுதாரர்கள் கூச்சல்களுக்கும் சர்க்கார் காதுகொடுக்காமல் விரைவில் சட்டமாக்கி அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமாய் விரும்புகிறோம்.

## சரியான பிரதிநிதிகள்

சென்பிரான்சிஸ்கோ மாநாட்டுக்கு இந்தியாவின் சார்பாக இந்திய சர்க்காரால் 2-பிரதிநிதிகள் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த இரண்டு பிரதிநிதிகளுடைய தெரிந்தெடுப்புப்பற்றி சிந்தித்துப் பார்ப்போமானால், இன்றைய நிலையில் அந்த மாநாட்டில் இந்தியாவின் உண்மையான நிலையையும் இன்றைய அவசியமான தேவையையும் எடுத்துச்சொல்லி பரிகாரம்தேட இவர்களைவிட வேறு தக்க நபர்களை இந்திய சர்க்காரால் தெரிந்தெடுத்திருக்க முடியாது என்றே சொல்லுவோம்.

ஏனெனில் ஒரு மாநாட்டிற்கு ஒரு நாட்டிலிருந்து பிரதிநிதிகள் தெரிந்தெடுத்து அனுப்பப்படவேண்டுமானால் அந்த நாட்டின் நிலைமையையும் தேவைகளையும் அறிந்தவர்களும் அதற்கு பரிகாரம் தேடுவதில் கவலையும் தகுதியும் உள்ளவர்களாகப் பார்த்துதான் தெரிந்தெடுத்தனுப்ப வேண்டும். இதுதான் தெரிந்தெடுக்கப்படுபவர்களுக்கும், தெரிந்தெடுப்பவர்களுக்கும் இருக்க வேண்டிய யோக்கியதாம்சமாகும்.

இன்று இந்தியாவின் நிலை என்ன? அதன் பிரச்சினை என்ன? என்று பார்த்தால் இந்தியாவின் பல இனம், பல மதம், பல சமுதாய சுயநல லட்சியம் ஆகியவைகள் இருந்துகொண்டு ஒன்றோடொன்று போராடிக்கொண்டு இந்நாட்டு உண்மையான குடிமக்கள் முன்னேறுவதற்கு மார்க்கமில்லாமல் அன்னியர் சுரண்டல்களுக்கு ஆளாகி தொல்லைப்பட்டுக்

கொண்டு இருக்கிறார்கள் என்பதும், என்ன செய்தால் இத்தொல்லை ஒழியும் என்பதேயாகும். இதை யாராவது மறுக்க முடியுமா என்று கேட்கிறோம்.

வர்க்கப் பூசலும் மதப் பூசலும் ஒருவரை ஒருவர் அடக்கி ஒடுக்கி அழிக்க முயலும் முயற்சியும், இந்தியாவின் சரித்திரக் காலத்திற்கு முன்பு இருந்து நடந்து வரும் காரியம் என்பதற்கு நமது குழந்தைகளின் பள்ளிப் பாட புத்தகங்களே பெரிய ஆதாரங்களாகும். அன்றியும் நமது 50, 60 வருஷ அரசியல், சமய இயல், சமுதாய இயல் போராட்டங்கள் அதைவிட தெளிவான ஆதாரங்களாகும். காங்கரஸ் ஆட்சி (1939-ல்) ஒழிந்த உடன் முஸ்லீம்களும் திராவிடர்களும் கொண்டாடின விடுதலை நாள் கொண்டாட்ட விழாவின் ஆடம்பரமும் ஆர்பாட்டமும் எல்லாவற்றையும் விட மேலான ஆதாரமாகும். கடைசியாக ஒன்றைச் சொல்லவேண்டுமானால் சிறிது காலத்திற்கு முன் காந்தியாரும் ஆச்சாரியாரும் ஜின்னா சாயபு வீட்டிற்குச் சென்று இரு கட்சிகளுக்குள்ளும் ராஜி செய்து கொள்ள முயற்சித்தும் முடியாமல் போய், கையில் இருந்த ஆயுதத்தையும் கொடுத்துவிட்டு வெறுங்கையுடன் வார்தா புகுந்த அத்தியாயம் போதுமானதாகும்.

மற்றும் அரசாங்கத்தார் அடிக்கடி இந்நாட்டு மக்களைப் பார்த்து "உங்களுக்குள் சரிப்படுத்திக் கொண்டு வாருங்கள்; நாங்கள் இராஜ்ஜியத்தை உங்கள் கையில் ஒப்புவித்துவிட்டுப் போய்விடுகிறோம்" என்பதும், இதற்குக் காந்தியார் 'நீ வெளியில் போய்விடு, பிறகு நாங்கள் ஒருவரை ஒருவர் எங்களாலானதைப் பார்த்துக் கொள்ளுகிறோம்" என்பதும்,

மற்றும் இந்தியத் தலைவர்கள் பிரமுகர்கள் என்பவர்கள் "எங்களால் ஒத்துப் போக முடியாவிட்டால் அது ஒரு பிரயாத தடை ஆகிவிடுமா? நீங்கள் ஏதாவது ஒரு சீர்திருத்தத் திட்டத்தை ஏற்பாடு செய்து அதை எங்களுக்கு அளியுங்கள்" என்பதும்,

பார்லிமெண்டு மெம்பர்களும், கேபினட் மந்திரிகளும் "இங்கிலாந்திலிருக்கும்படியான ஜனநாயக ஆட்சி முறை இந்தியாவுக்குப் பொருந்தாது; அங்கு காணக்கூடாதவன், தொடக்கூடாதவன், நிழல் மேல்படக்கூடாதவன், ஒருவர் பார்க்க (மற்றொருவர்) உண்ணக்கூடாதவன், எழுத்து வாசனை அற்ற தெருவில் நடக்க உரிமை இல்லாத மக்கள் கோடி கோடியாய் இருக்கும்போது யாரிடம் சீர்திருத்தத்தையோ, நாட்டையோ ஒப்புவிப்பது?" என்று சொல்லுவதும், இப்படியாக இன்னும் எத்தனையோ ஆதாரங்கள் இருந்து வருவதை எந்தத் தேசியவாதியாவது, பொதுவுடைமைக் காங்கரஸ் வாதியாவது, மற்றும் யாராவது மறுக்கமுடியுமா என்று கேட்கிறோம்.

இப்படிப்பட்ட நிலையில் இப்படிப்பட்ட பிரச்சினைகளுக்குப் பரிகாரம் தேட யாரை பிரான்சிஸ்கோ மாநாட்டுக்குப் பிரதிநிதியாக அனுப்புவது என்றும், யாரை அனுப்பினால் இந்திய மக்கள் எல்லோரும் சரி என்று ஒப்புக்கொள்ளக்கூடியவர்களாயிருப்பார்கள் என்றும் கூப்பாட்டுக்காரர்களைக் கேட்கின்றோம்.

எனவே இப்போது இந்திய சர்க்காரால் தெரிந்தெடுத்து அனுப்பப்போகும் சர் ஏ. இராமசாமி முதலியார் அவர்களும், சர் பிரோஸ்கான்நூன் அவர்களும் மற்ற யாரையும்விட பொருத்தமானவர்கள் என்றே சொல்லுவோம்.

இதுநிற்க, இந்திய சர்க்காரார், அந்த மாநாட்டுக்கு அனுப்ப 2-பிரதிநிதிகளைக் கொடுக்கும்படி கேட்டால் காந்தியார்தானாகட்டும் யாரைக் குறிப்பிடுவார் என்று கேட்கிறோம். தன்னுடைய ராமராஜ்ஜிய திட்டத்திற்கு ஏற்ற நபர்கள் வேண்டுமானால் தெரிந்தெடுக்க அவருக்கே ஆள் கிடைக்காது, கிடைத்தாலும் அதை வெளியிட அவரே வெட்கப்படுவார். அல்லது "வெள்ளைக்காரனே வெளியேபோ" என்கின்ற திட்டத்திற்கு ஏற்ற நபர்கள் வேண்டுமானாலும், அதற்கும் ஆள் கிடைப்பது கஷ்டமாக இருக்கும். அன்றியும் காந்தியாரே அந்த திட்டத்தை மாற்றிக்கொண்டதாகக் காட்டிக்கொண்டுவிட்டார். தவிரவும் இன்று காந்தியாரின் திட்டம் என்ன என்பதும் தேசியவாதிகளின் திட்டம் என்ன என்பதும் பூதக்கண்ணாடி போட்டுத் தேட வேண்டியதாக இருக்கிறது.

கடைசியாக காந்தியாரோ தேசிய வாதிகளோ திருப்திபடும்படியான பிரதிநிதிகள் வேண்டுமானால் "இந்து முஸ்லிம் பிரச்சினை எங்கள் நாட்டில் கிடையாது, இருப்பதாகச் சொல்லுவது பிரிட்டிஷார் உற்பத்திசெய்தது, ஜாதி பேதம் இனபேதம் வகுப்புப் பிரச்சினை ஆகியவைகளும் எங்கள் நாட்டில் கிடையாது, இருப்பதாகச் சொல்லுவதெல்லாம் சர்க்காரால் உண்டாக்கப்பட்டவைகளாகும், காங்கிரஸ் சொல்லுகிறபடி சீர்திருத்தம் (சுயராஜ்யம்) வழங்கினால்தான் இந்தியா திருப்தி அடையும், இல்லாவிட்டால் ஏகாதிபத்தியத்திற்கு ஆபத்து வரும்" என்று சொல்லும்படியாக ஏதாவது ஒரு தேசபக்தர் குப்புசாமி, அண்ணாமலையோ, அல்லது ருக்குமணி, விஜயலட்சுமி அம்மாளையோ அனுப்பி அவர்கள் அங்கு சென்று மற்றக் கட்சிகளை ஆசைதீர வைதுவிட்டு வந்துவிட்டால் மகா திருப்தி அடைந்து தேசியப் பத்திரிக்கைகள் சபாஷ் பட்டங்கள் அளிக்க முன்வரும். அப்படிக்கு இல்லாமல் நன்றாய்

## பெரியார் உடல் நிலை

பெரியார் ஒருவாரகாலமாக சென்னையில் நாக்குப் புண் விஷயமாய் சிகிச்சை பெற்று வருகிறார். புண் ஏற்கனவே செய்யப்பட்ட 'கரண்ட்' சிகிச்சையின் பயனாய் குணப்பட்டுவிட்டது என்றாலும் 'கரண்ட்' வேகத்தால் வாயிலும், நாக்கிலும் புண் அதிகமாகி அதோடு பல இடங்களில் பேசியதால் மிகவும் அதிகமாகி தொந்திரவும் வலியும் கொடுத்தது என்றாலும், ஒருவார ஓய்வினால் முக்கால்வாசி குணமாகிவிட்டது.

இம்மாதக் கடைசியிலும் அடுத்த மாத முதல் இரண்டு மூன்று தேதிகளிலும் சென்னையிலும், பூந்தமல்லி குன்னத்தூரிலும் நடக்கும் மாநாட்டுக்கும், கூட்டங்களுக்கும் மற்ற நிகழ்ச்சிகளுக்கும் சென்றுவிட்டு ஈரோடு வழியாவது, கோவையாவது காரைக்குடி மாநாட்டுக்கும் சென்றுவிட்டு ஈரோடு திரும்புவார்.

விஷயம் தெரிந்தவர்களையும் பெருமையும், தகுதியும், சாமர்த்தியமும் உள்ளவர்களாகப் பார்த்து சர்க்கார் அனுப்பிவிட்டதால் இப்போது "தேசிய இயக்கங்களுக்கு" குறையும், பதிலும் சொல்லுவதற்கே இடமில்லாமல் போய்விட்டதால் அவை அழுவதைத் தவிர வேறு வகையற்றவைகளாக ஆகிவிட்டன.

எப்படி இருந்த போதிலும் இந்தப் பிரதிநிதிகள் இன்றைய நிலையில் மற்றவர்களைவிட மேலானவர்கள் தான் என்பதல்லாமல் சுதந்திரப் புத்தியுடன் நடந்து கொள்ளக் கூடியவர்களா அந்தப்படி நடந்துகொண்டார்களா, என்பதை அறிய காத்துக்கொண்டு இருக்கிறோம்.

## செஷனுக்கு கமிட்டு

தோழர்கள் N. S. கிருஷ்ணன், பாகவதர், ஸ்ரீராமுலுநாயுடு ஆகியவர்கள் மீது தொடரப்பட்ட லக்ஷிமிகாந்தம் கொலை வழக்கு செஷனுக்கு கமிட் செய்யப்பட்டு விட்டது.

ஏப்ரல் 2ந்தேதி ஐகோர்ட் ஜட்ஜு வீர்மார்கட் துரை முன்பாக செஷன் துவக்கப்படும். பாரிஸ்டர் எதிராஜ் அவர்கள் கிருஷ்ணன் அவர்களுக்கு வக்கீல்.

## ஆதிதிராவிட மகாநாடு

வட செங்கற்பட்டு ஜில்லா ஆதி திராவிட முதல் மகாநாடு திருவள்ளூர், பொன்னேரியில் 25-3-45-ஆம் தேதி தோழர் ஜெ. தங்கராஜ் தலைமையில் நடைபெறும்.

## ஐம்பையில் "நபிகள் நாயகம் நாள்"

பவானிக்கடுத்த ஐம்பையில் 18-3-45-ந் தேதி இரவு 10 மணிக்கு பவானி கால்நடை வைத்தியர் டாக்டர் அபூபக்கர் தலைமையில் நபிகள் நாயகம் நாள் கொண்டாடப்பட்டது. தலைவர் முன்னுரையை தோழர் வி. ஆர். நாயுடு அவர்கள் மொழிபெயர்த்தார். தோழர்கள் ஈரோடு மௌல்வி அப்துல் காதர் ஈரோடு மைதீன்பாட்சா, ஐம்பை தமிழ்ப் பண்டிதர் அப்பாவு முதலியார், ஈ. வி. கே. சம்பத், மௌல்வி அப்துல் கனி, ஐம்பை இப்ராஹீம், ஐம்பை அனிபாசாயபு ஆகியோர் நபிகள் நாயகம் வாழ்க்கை வரலாறு பற்றி விளக்கிப் பேசினார்கள். வந்தனோபசாரத்துடன் இரவு 1 மணிக்கு கூட்டம் முடிந்தது.

## குடந்தை மக்கள் கஷ்டம்

### சர்க்காருக்கு முறையீடு

குடந்தை சர். ஏ. டி. பன்னீர்செல்வம் சமரச வாலிபர் சங்கத்தில் 16-3-45-ந் தேதி தோழர் கோ. நடேசன் அவர்கள் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. சென்னை சர்வகலா சாலையில் சர். சண்முகம் செட்டியார் அவர்கள் பாகிஸ்தானம் பிரிப்பது முறையல்ல என்று சொன்னது பற்றி வருந்துவதாகவும், மகாமக குளத்தில் முழங்கால் தண்ணீரில் பல்லாயிரக் கணக்கான மக்கள் நீராட இறங்கி சேற்றைப் பூசிக் கொண்டு சென்ற காட்சியை சுகாதார அதிகாரி கண்டு களித்ததைக் கண்டிப்பதாகவும், குடந்தையிலுள்ள குளங்களினால் ஆண்களுக்கும், பெண்களுக்கும், கால் யானைக்கால் மாதிரியும், விதை பறங்கிக்காய் மாதிரியும், வீங்கும் நோயை உண்டுபண்ணுவதால், டை குளங்களை மூடி குழாய்த் தண்ணீரை விரைவில் கொண்டுவந்து மக்கள் புழங்கும்படிச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்வதாகவும், மகாமகத்தைக் குறித்து 'கல்கி' கூறிய கூற்றைக் கண்டித்தும், திராவிடநாடு பிரிக்கப்பட்ட பின் கடவுள் பெயரால் நடைபெறும் பித்தலாட்டம் எல்லாம் மறைந்துவிடுமென்றும், கோவில்களில் பல்லக்குகளைத் தூக்கிச் செல்லும் வழக்கத்திற்குப் பதிலாகப் படிச்சட்டத்தில் வைத்து மாடுகளை இழுத்துச் செல்லும்படியாக ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கோவில் நிர்வாகிகளுக்கு உத்தரவு போடும்படியாக சர்க்காரைக் கேட்டுக்கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## மாணவர் கழகம்

ஈரோட்டில் பெரியார் மாளிகையில் 23-4-45-ல் தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், எஸ். தவமணி இராசன் ஆகியோர் முன்னிலையில் திராவிட மாணவர் கழகம் நிறுவப்பட்டு கீழ்கண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. தோழர்கள் சாதுமைதீன் தலைவர்; கோவிந்தராசன், வஹாப் துணைத் தலைவர்கள்; மாணிக்கம், இராமகிருஷ்ணன் கூட்டுச் செயலாளர்கள்; யூசுப் பொருளாளர்.

தோழர் எஸ். தவமணி இராசன் கழக வழிமுறைகளை விளக்கிக் கூறிய பின் நன்றி கூறுதலுடன் கூட்டம் முடிவுற்றது.

## திருச்சி உறையூர் மருத்துவகுல சங்கம்

### முதலாவது ஆண்டுவிழா

31-3-45 சனிக்கிழமையன்று உறையூர், நாச்சியார்கோவில் பின்புற மைதானத்தில் தோழர் சி. எஸ். ஞானம் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

## சங்கீதக்கச்சேரி

பாரதி வாலிபர் சங்க நிதிக்காக என். ஏ. சுந்தரம் சங்கீதக்கச்சேரி ஈரோடு சரஸ்வதி ஹாலில் 28-3-45-ந் தேதி மாலை 6-30 மணிக்கு நடைபெறும்.

## மாகாண மருத்துவர் கூட்டம்

மாகாண மருத்துவர் குல முதல் கமிட்டிக் கூட்டம் 31-3-45-ல் நடைபெறாது. 21-4-45-ல் திருச்சியில் நடைபெறும். என டை சங்கக் காரியதரிசிகள் தெரிவிக்கின்றனர்.

## திருமணம்

21-2-45-ல புதன்கிழமை காலை 9 மணிக்கு காயல்பாக சீர்திருத்த உலக சிற்பி தோழர் குலாம் தலைமையில் தோழர்கள் ஏ. கே. பாஷா—முசமூதா பேகம் வாழ்க்கை ஒப்பந்தம் நடந்தது. சர்க்கிள் இன்ஸ்பெக்டர் தோழர் ஷேக் இப்ராகீம், தாசில்தார் இன்னும் மற்ற வேறு பெரிய மனிதர்கள் வந்திருந்தனர். புதுக்கோட்டை, திருச்சி, ஈரோடு, தஞ்சை, மதுரை முதலிய இடங்களிலிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்தன. ஆடம்பரமில்லாமல் அனாவசியமான சடங்குகளை விட்டுவிட்டுச் செய்த முதல் இஸ்லாமிய திருமணம் இதுவென்றே சொல்லலாம்.

## மணமகள் தேவை

சுமார் ரூ. 20000 இருபதாயிரம் சொத்துடையவரும் இண்டர். மீடியட் சீனியர் வகுப்பு படித்தவரும் தமிழ் பத்திரிகைகளின் ஆசிரியராக மாதம் ரூ. 70 சம்பாதிப்பவருமான கோனார் வகுப்பைச் சேர்ந்த 21 வயதுடையவருக்கு மணமகள் தேவை. மணமகள் சுமார் 16 வயதுடைய நற்குணம் தன்மான உணர்ச்சி போதிய கல்வி அறிவுடையவராய் டை வகுப்பில் இருந்தால் நலம். திருமணம் சீர்திருத்த முறைப்படி ரிஜிஸ்டர் திருமணமாக நடைபெறல் வேண்டும். விருப்பமுள்ளவர்கள் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும். கடிதப்போக்குவரத்து பத்திரமாக வைக்கப்படும்.

A. K. பாண்டியன்,
நெ. 37 இந்திரா ஸ்டோர்,
(தெரு) சுப்பிரமணியபுரம், மதுரை.

## செல்வம் நாள்

2-3-45 மாலை 6 மணிக்கு குடவாசல், திருக்குளம் தென்கரையில் செல்வம் நினைவு நாள் கூட்டம் நடைபெற்றது. திருச்சி தளபதி டி. பி. வேதாசலம் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

தோழர்கள் எம். சோமசுந்தரம் பி. ஏ., எல். டி., என். எம். கோவிந்தசாமி பி. ஏ., எல். டி., மருதப்பா எம். ஏ., பி. சுப்பையா, என். தவமணி இராசன் ஆகியோர் பேசினார்கள். தோழர் என். வி. சீனிவாசன் நன்றிகூறக் கூட்டம் இரவு 9-30 மணிக்கு முடிவுற்றது.

அன்று மாலை 1000 ஏழைகட்கு கஞ்சி வார்க்கப்பட்டது. ஜில்லா போர்டு உயர்நிலைப் பள்ளியில் ஒவ்வொரு வகுப்பிலும் முதல்வனாய்ப் படிக்கும் திராவிட மாணவனுக்கு செல்வத்தின் பெயரில் பரிசு கொடுப்பதென ஏற்பாடாகி இருக்கிறது.

0 0

4-3-45 இரவு கரூர் திராவிடர் கழகத்தில் தோழர் சி. கோவிந்தராசு தலைமையில் கொண்டாடப்பட்டது. தோழர்கள் தமிழரசு, கரிகாலன், நக்கீரர், சே. வேலாயுதம், சொற்பொழிவாற்றினார்கள். இந்து சட்ட சீர்திருத்தத்தை ஆதரித்தும் கழகக் கட்டிடத்திற்கு நிதி திரட்டவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

* *

4-3-45-ல் மாலை 6 மணிக்கு தாராவி திராவிடர் கழகத்தில் தோழர் என். டி. சவரிதாசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எஸ். சுப்பையா, அஸ். இளங்கோவடிகள், எம். கே. சுந்தரராஜ், பெ. மா. அருணாசலம் ஆகியோர் பேசினர்.

0 0

திருவண்ணாமலை திராவிடர் கழகக் கட்டிடத்தில் 5-3-45-ல் கொண்டாடப்பட்டது. தோழர் சங்கரநாராயணன் தலைமைவகித்தார். தோழர் பி. சி. லிங்கப்பா இசைவிருந்தளித்தார். தோழர்கள் வையாபுரி, பெருமாள், சாமி, லிங்கப்பா ஆகியோர் பேசினார்கள்.

0 0

சர் செல்வம் நினைவு வாரத்தை முன்னிட்டு 4-3-45 ஞாயிறு மாலை 5-15 மணிக்கு [illegible] குமார ஸ்தாபன் [illegible] ஓர் மாபெரும் கூட்டம் சென்னை நகர திராவிடர் கழகம், புரசை (20-வது வட்டம்) திராவிடர் கழகம் ஆதரவில் நடைபெற்றது. தோழர் அன்பழகன் துணைவியார் தோழர் வெற்றிச் செல்வி தலைமை வகித்தார்.

தோழர்கள் என். வி. நடராசன், எஸ். ஜீவரத்தினம், சே. அன்பழகன் ஆகியவர்கள் சர். செல்வம் நாட்டிற்கும், திராவிட சமுதாயத்திற்கும் செய்துள்ள சேவைகளையும், அவர் தலைவர் பெரியாருக்கு வலதுகைபோன்றிருந்து அரும்பணியாற்றியதையும், மற்றும் திராவிடநாட்டுப் பிரிவினையைப்பற்றியும், தொழிலாளர்கள் திராவிடர் இயக்கத்தில் சேரவேண்டிய அவசியத்தைப்பற்றியும் மிக விளக்கமாகப் பேசினார். ஏராளமான பெண் தொழிலாளர்கள் வந்திருந்தனர். பின்னர் தலைவர் முடிவுரைக்குப்பின் தோழர் தங்கருபன் வணக்கம்கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

0 0

6-3-45 மாலை 6-30 மணிக்கு இரட்டணைத் தோழர் சாம்பசிவம் தலைமையில் புவனகிரியில் நடந்தது. தோழர்கள் எஸ். கே. சாமி, ஆர். வி. கோபால் கோ. இரத்தினவேலு. எ. ஆறுமுகம் ஆகியோர் பேசினார்கள்.

0 0

பொத்தனூர் ஒலிபரப்பு முற்றத்தில் 6-3-45-ல் தோழர் க. சியப்பிரகாசம் தலைமையில் கொண்டாடப்பட்டது. புலவர் அவ. பொன்னம்பலனார் செல்வத்தின் படத்தைத் திறந்து வைத்தார். தோழர் இரா. காவலடி பேசினார். இரா. சண்முகம் நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது.

0 0

குளத்தூர் மேலக்கடைத் தெருவில் தோழர் ஆ. புழுதியாண்டவர் தலைமையில் நடந்தது. தோழர்கள் மு. பெத்தாசன், பொ. முருகேசபாண்டியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

0 0

6-3-45 மாலை 5 மணிக்கு தூத்துக்குடி சண்முகபுரம் பள்ளியில் செல்வம் ஞாபகார்த்த வாலிபர் சங்கச்சார்பில் ஒரு ஊர்வலத்துடன் கொண்டாடப்பட்டது. தோழர் பி. வி. பொன்னுசாமி தலைமை வகித்தார். பல தோழர்கள் செல்வரின் சேவை குறித்துப் பேசினார்கள். சண்முகபுரம் தென்னிந்திய நல உரிமைச் சங்க(?) கழகத்தாரால் 'பாரா' விளையாட்டு நடந்தது. பின் நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது.

7-3-45 மாலை 8 மணிக்கு பொன்மலை, மேலகற்கண்டார் கோட்டை திராவிடர் கழகத்தில் நடைபெற்றது. கழக முதலாண்டு விழா ஏப்ரல் மாத முதல் வாரத்தில் நடத்த முடிவு செய்யப்பட்டது.

தோழர் சுந்தரம் அவர்களின் குழந்தை இறந்தமைக்கு அன்னார் குடும்பத்திற்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

0 0

தஞ்சை நகர திராவிடர் கழகக் கட்டிடத்தில் தோழர் ஜி. ஆளவந்தார் தலைமையில் தோழர்கள் எஸ். ஆர். சுப்பண்ணா செல்வம் படத்தைத் திறந்து வைத்தார். தோழர்கள் கே. என். மணி, இ. குழந்தையா முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

0 0

திருநெல்வேலி—பாளையங்கோட்டை திராவிடர் கழகத்தின் சார்பில் 10.3-45 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு தோழர் எ. வி. முத்தையா தலைமையில் நடந்தது. தோழர்கள் கே எம். பிரமநாயகம், அருணாசலம், சமயபுறம் பி. ராமகிருட்டிணன், இலக்குவனார் முதலியோர்கள் பேசினார்கள். கே. பி. துரைசாமி வந்தனோபசாரம் கூற கூட்டம் முடிவுற்றது.

0 0

10-3-45 சனிக்கிழமை மாலை 6-30 மணிக்கு தஞ்சைத் திராவிட வாலிபர் கழகத்தின் சார்பாக எ. ஒய். எஸ். பரிசுத்த நாடார் தோட்டத்தில் திருச்சி வழக்கறிஞர் தோழர் டி. பி. வேதாசலம் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் 1-30 மணி நேரம் சொற்பொழிவாற்றினார்கள். பின் தோழர்கள் கே. சி. பெரியசாமி, துறையூர் து. மா. பெரியசாமி, எஸ். தவமணி இராசன், கே. கே. நீலமேகம் ஆகியோர் பேசினார்கள்.

ஒலிபெருக்கி அமைக்கப்பட்டிருந்தது.

## தீ விபத்து

ஜி கல்லுப்பட்டி ஆதிதிராவிடர்களின் குடிசைகள் சுமார் 40, 18-3-45-ந் தேதி பிற்பகல் சுமார் 4½ மணிக்கு தற்செயலாக ஏற்பட்ட தீ விபத்தால் நாசமாயின. தானியம் மற்றும் பல சாமான்கள் உட்பட சுமார் 3000 ரூபாய் நஷ்டம்.

# திராவிட நாட்டுச் செய்திகள்

கீழசால் ஆதிதிராவிடர் ஐக்கிய சங்கத்தில் 23-12-44-ந் தேதி தோழர் எம். எ. ஹக்காஸ் தலைமையில் "எம். சி. ராஜா ஞாபகார்த்தப் பகுத்தறிவு கழகம்" ஒன்று நிறுவப்பட்டது.

* *

டெம்பூர், செம்பியம் ஆதிதிராவிட அபிவிருத்திக் கழகத்தினாதரவில் 15-1-45-ந் தேதி தோழர் டி. சண்முகம் அவர்கள் தலைமையில், செங்கற்பட்டு போர்டுக்கு போட்டியின்றி தெரிந்தெடுக்கப்பட்ட தோழர் பி. எஸ். மணிக்கு ஓர் பாராட்டுபசாரம் நடந்தது.

* *

குனியமுத்தூர் தேவேந்திர வாலிப சங்கத்தின் கூட்டம் தோழர் ஆர். நரசிம்மலு தலைமையில் 21-1-45-ந் தேதி நடைபெற்றது. நிர்வாகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

* *

சக்கரசிங்கல்லூர் இளந்தமிழர் சங்கத்தின் சார்பில் தோழர் நல். நடராசன் தலைமையில் 16-1-45-ந் தேதி நடைபெற்ற கூட்டத்தில் "திராவிடர் கழக"த்தைப் பற்றி பல தோழர்கள் பேசினார்கள்.

* *

ஈரோடு மருத்துவர் சங்கத்தின் மாதாந்திரக்கூட்டம் தோழர் கே. வெள்ளைச்சாமி தலைமையில் 13-1-45ந் தேதி நடைபெற்றது. மேளம் வாசிப்பவர்களும் பெரும் வியாதியஸ்தர்களும் உள்ளே வரக்கூடாது என்று ஒவ்வொரு சலூன்களிலும் கூட்டங்களிலும் தான்கள் தொங்கவிட வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

* *

வேலங்குடி தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் ஆரம்பவிழா 27-12-44ல் தோழர் ச. லீ. வழியூரார் தலைமையில் மிக்கச் சிறப்பாக நடந்தேறியது.

* *

24-12-44ந் தேதி தோழர் வி. வி. முருகேச பாகவதர் தலைமையில் நடைபெற்ற சென்னை பொம்பூர் பேரக்ஸ் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தின் ஆலோசனைக்கூட்டத்தில் டாக்டர் அம்பேத்கார், தாழ்த்தப்பட்டோர் தனி சமுதாயம் என்பதை ஆதரித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* *

மேலப்பாளையம் நகர முஸ்லிம் லீகின் ஆதரவில் 26-12-44ந் தேதி தோழர் கே. எம். எஸ். ஹமீது சாஹிப் பி. ஏ., பி. எல்., தலைமையில் ஜனாப் ஜின்னா அவர்களின் 69வது பிறந்தின விழா கொண்டாடப்பட்டது.

* *

சுவாமிமலை இளைஞர் இலவச வாசகசாலையின் நிர்வாகிகள் தேர்தல் கூட்டம் 1-1-45ந் தேதி தோழர் பெர. இரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

* *

லால்குடியில் 15-1-45ந் தேதி தமிழ்த் திருநாள் சிறப்புக்கூட்டம் தோழர் எல். எஸ். ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது.

* *

மோகனூர் தேவேந்திர இளைஞர் சங்கக்கூட்டம் 1-1-45ந்தேதி திருச்செங்கோடு தாலுகா வேட்டப்பாளையம் கிராமத்தில் தோழர் கே. மாரிமுத்து தலைமையில் நடைபெற்றது.

* *

புவனகிரி நெசவாளர் கழகக் கமிட்டிக் கூட்டம் 25-12-44 மாலை தோழர் அ. ந. நடராசு தலைமையில் கூடி ஜில்லாக் கழகம் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

* *

கரூர் தாலுகா புகளூர் கிராமத்தில் தேவேந்திர குல வேளாளர் வாலிபர் சங்கம் தோழர் எம். பி. கந்தசாமி அவர்களால் 14-1-45-ல் திறந்து வைக்கப்பட்டது.

* *

14-1-45 கரூர் தாலுகா தோட்டக்குறிச்சி கிராமத்தில் தேவேந்திரகுல வேளாள வாலிபர் சங்க மாதாந்திரக் கூட்டம் தோழர் சி. குமாரசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஆர். கோவிந்தசாமி, எஸ். தியாகராசன், எம். மாரியப்பன் முதலியவர்கள் பேசினார்கள்.

* *

திருச்சி மாவட்ட மருத்துவர் சங்கப் பொதுக்கூட்டம் 27-1-45 மாலை 5-மணிக்கு டாக்டர் க. பிச்சைமுத்து தலைமையில் நடந்தது. பல தோழர்கள் 'மயான ரதம்' குறித்துப் பேசினார்கள்.

o o

5-2-45-ல் ஈரோடு கொங்கு வேளாளர் சங்கக் கூட்டம் தோழர் டி. அண்ணாமலைக் கவுண்டர் ரைஸ் மில்லில் டாக்டர் எல். கே. முத்துசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் ஒ. எம். ரங்கசாமிக் கவுண்டர் அவர்களைத் தலைவராகக் கொண்டு புதிய நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

o o

திருச்சி சிந்தாமணி ஆதித்தமிழ் மாணவர் கழகத்தின் 5-ம் ஆண்டுவிழா 24-2-45ல் மாலை 6மணிக்கு பிஷப்ஹீபர் உயர்நிலைப்பள்ளி மண்டபத்தில் நகராண்மைக் கழக ஆணையாளர் தோழர் ஆ. பாலசுந்தரம் பி. ஏ., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் டி. பி. வேதாசலம், ரம்போலா-மஸ்கரனாஸ், வி. வீராசாமி பி. ஏ., கி. அ. பெ. விசுவநாதம் ஆகியோர் பேசினார்கள்.

o o

புவனகிரி திராவிடர் கழகத் தலைவர் கே. சமியவாயம் அவர்களின் காலஞ்சென்ற சிற்றன்னை குப்பம்மாள் அவர்களின் நினைவுநாள் 25-2-45 காலை 8-30 மணிக்கு தோழர் ஆர். வி. கோபால் தலைமையில் கொண்டாடப்பட்டது. பல தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

o o

தஞ்சை மஹாவீர ஜைன சங்கசாரியில் 23-2-45 மாலை 7மணிக்கு தோழர் வே. வேங்கடராஜுலு ரெட்டியார் சொற்பொழிவாற்றினார்.

o o

தாராபுரம் பலிஜவார் வாலிபர் சங்கக் கூட்டம் 25-2-45 தோழர் சிவநேசஅடிகள் தலைமையில் கூடிற்று. தோழர் தங்கி. சிதம்பரசாமிக் கவுண்டர் பெரியசாமி ஆகியோர் பேசினார்கள்.

o o

மோகனூர் கந்தசாமி இலவச வாசகசாலையில் 2-3-45-ல் தோழர் எம். பி. கந்தசாமி தலைமையில் நடந்த சேலம்—திருச்சி தேவேந்திர வாலிபர் சங்கங்களின் நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

o o

பெரியகுளம் மணி வாசக மன்றத்தில் 4-3-45-ல் தோழர் அ. சு. பாண்டியனார் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது.

o o

5-3-45 காலை 9½ மணிக்கு தஞ்சை கீழவாசல், கவாடிக்காரத் தெருவிலுள்ள நகராட்சி மன்ற ஆரம்பப் பள்ளியின் புதிய கட்டிடத் திறப்பு விழா தஞ்சை நகராட்சி மன்றத் தலைவர் ராவ்பகதூர் எ. ஒய். அருளானந்தசாமி நாடாரவர்களின் தலைமையில் சிறப்புடன் நடைபெற்றது. சங். மரியசூசை, நாதசுவாமிகள், எம். அடைக்கலசாமிப் புலவர், கரந்தைத் தமிழ்ச் சங்க வித்துவான் வகுப்பு மாணவர்கள் பி. குழந்தையா, கே. எஸ். மணியம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

o o

7-3-45ந் தேதி இரவு 10-மணிக்கு கோவை சாரதா பெண் பாடசாலையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் தோழர் இரா. நெடுஞ்செழியன், வி. எம். அபிராமசெட்டியார், பி. சுந்திரராஜன், சி. ராஜகோபால் முதலியவர்கள் பேசினார்கள். முடிவில் கன்வீனர் எம். பட்டிலிங்கம் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

o o

சென்னை, வண்ணையம்பதி, 13-ஆண்டியப்பமுதலியார் தெருவிலுள்ள தமிழ் இளைஞர் கழகத்திற்கும் தோழர் த. வீ. சுந்தரமூர்த்தி அவர்களுக்கும் சம்பந்தமில்லை யென்றும், அவர் கழகத்திற்குக் கொடுத்திருந்த பீரோ, நாற்காலி முதலியவைகளைத் திருப்பி வாங்கிக்

கொண்டு விட்டார் என்றும் ஷை கழகக் காரியதரிசி தெரிவிக்கிறார்.

o o

குணமங்கலம் ஆதிதிராவிட இளைஞர் கழகத்தின் உறுப்பினர் கூட்டம் 1-1-45ந் தேதி தோழர் பி. வைத்தியலிங்கம் தலைமையில் கூடியது. பல தோழர்கள் பேசியபின், சேலம் மாநாட்டுத் தீர்மானங்களை ஆதரித்தும், ஷை கழகத்திற்குக் கட்டடம் வாங்க ஒரு கமிட்டி நியமிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டபின், ஆதிதிராவிட தெருவிலுள்ளவர்களுக்கு வரும் தபால்காரர்கள் தபால்களைக் குறித்தவர்களிடம் சேர்க்காமல் கண்டவர்களிடம் கொடுத்துவிடுவதைக் கண்டித்தும், மணியார்டர்களுக்கு சாட்சி போடும் ஆட்களை தாழ்த்தப்பட்ட மக்களுக்குள்ளே தெரிந்தெடுத்து நியமனம் செய்யும்படி அதிகாரிகளைக் கேட்டுக் கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

o o

கோலார், தங்கவயல் சமரச தாழ்த்தப்பட்டார் கழகத்தின் 11-வது ஆண்டு விழா தோழர் பி. இங்கர்சால் அவர்கள் தலைமையில் 31-1-45ல் நடைபெற்றது. தோழர் எம். சி. துரை அவர்கள் சொற்பொழிவாற்றினார். புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

o o

வலம்புரி தமிழர் கழகம் 28-12-44 காலை 11-30 மணிக்கு டவுன்ஹால் டாக்கீஸில் திறக்கப்பட்டது. கனம் கதார் பி. கலிபுல்லா சாகிப் எம். ஏ., பி. எல். அவர்கள் திறப்பு விழா நிகழ்த்தித் தலைமை தாங்கினார்கள். தோழர்கள் பு. ர. சுவாமிநாதன் எம். ஏ., எல். டி.; கி. நாராயணசாமி, சு. இராஜேஸ்வரி முதலியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

o o

மணச்சநல்லூர் மருத்துவர்கள் பொதுக்கூட்டம் 13-1-45-ல் தோழர் வீ. பெருமாள் தலைமையில் நடைபெற்றது. பல தோழர்கள் பேசினார்கள்.

* *

நீடாமங்கலம் சுயமரியாதைச் சங்க இலவச வாசகசாலை உறுப்பினர்கள் கூட்டம் தோழர் அ. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. தோழர் டி. சோமசுந்திரம், செ. த. நாயகம் ஆகியோர் மறைவு குறித்து அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

o o

சிவகாப்புத்தூர் முத்துராஜ மகாஜன சங்கப் பொதுக் கூட்டம் 31-1-45 இரவு 9 மணிக்கு மாரியம்மன் கோவில் முன்பாக தோழர் பி. நல்லையா தலைமையில் நடைபெற்றது. தோழர் பெ. சண்முகம். ந. பூசாரி, தே. வீரமலை ஆகியோர் பேசினர்.

* *

புதுக்கோட்டை அறிவு வளர்ச்சிக் கழக கூட்டம் 31-1-45-ல் தோழர் வீ. கதிரேசன் செட்டியார் தலைமையில் கூடிற்று. இந்துலாசட்ட சீர்திருத்தத்தை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* *

தமிழ்நாடு தாழ்த்தப்பட்ட கிருஸ்தவ காலக்குடி தாலூக்கா கல்வி அபிவிருத்திச் சங்கக் கூட்டம் 30-12-44-ல் தோழர் ஏ. தேவசகாயம் தலைமையில் நடைபெற்றது. நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

* *

வேலங்குடி தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் பொதுக் கூட்டம் 13-1-45-ல் நடைபெற்றது.

தோழர்கள் வி. எஸ். பி. யாகூப், பி. ராசய்யா ஆகியோர் பேசினார்கள்.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

1. தோழர் சி. டி. நாயகம் மறைவு குறித்து வருந்துகிறது.

2. திருச்சி ஜில்லா போர்டார் டாக்டர் அம்பேத்காரவர்களை வரவேற்பதில்லை என்று தீர்மானித்ததைக் கண்டிக்கிறது.

3. திராவிடநாட்டுப் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் திராவிடநாட்டுப் பிரிவினைத் திட்டத்தை முழுமனதுடன் வரவேற்பதுடன் பெரியாரவர்களால் ஆரம்பிக்கப்படும் போராட்டங்களில் நாங்களும் ஒத்துழைக்கத் தயாராயிருக்கிறோம் என இக்கூட்டம் தெரிவிக்கிறது.

5. டாக்டர் அம்பேத்காரவர்களை திருவாரூருக்கு அழைப்பது.

o o

19-12-44 "குடி அரசு"ல் வெளிவந்த விளாக்களுக்கு உறையூர் திராவிட இளைஞர் கழகத்தார் 10 தோழர்களுக்கு பகுத்தறிவுப் புத்தகங்கள் பரிசாக அனுப்பியுள்ளார்கள்.

o o

23-1-45ல் புதியம்புத்தூரில் ஆதிதிராவிட ஐக்கிய சங்க சார்பில் தோழர் ஜே. ஜோசப் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தோழர் எஸ். ஆர்தர் ஆபிரஹாம் சங்கத் திறப்புவிழா வாற்றினார். தோழர்கள் எஸ். ஜான்டேவிட், எம். இராமசாமி, எஸ். காருண்யம், கே. சுப்பையா ஆகியோர் பேசினார்கள்.

o o

ஆத்துக்குடி ஆதிதிராவிட ஐக்கிய சங்கத்தின் கூட்டம் 25-1-45-ல் தோழர் சண்முகம் பிள்ளை தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பி. என். ராஜ், போஜ் எட்வர்ட்ஜேக்கப், எம். ஏ. ஹூக் கான், சென்னை ஜீவரத்தினம் ஆகியோர் பேசினர்.

o o

14-1-45 பிற்பகல் இரண்டு மணிக்கு ஆலங்குடி கடைத்தெருவில், தோழர் கு. பராங்குசம் அவர்கள் ஜீவசாயிகள் சங்கம் ஒன்றைத் திறந்துவைத்தார். இவ்வூர் பஞ்சாயத்துக் கோர்ட்டு தலைவர் தோழர் ஏ. சி. மாணிக்கம் சேர்வை அவர்கள் தலைமை வகித்தார். பிறகு தோழர்கள் இராம. கலியாணசுந்தரம், நா. முத்து, தி. கோ. சீனிவாசன், பாவா முதலியோர் சொற்பெருக்காற்றினார்கள். ஆ. கு. இராமசாமி வந்தனோபசாரம் கூறினார்.

o o

20-1-45-ந் தேதி திருச்சி அருந்ததியார் திராவிட கழகத்தின் இரண்டாவது கூட்டம் தோழர் டி. பி. சின்னையா அவர்கள் தலைமையில் இரவு 8-30 மணிக்கு கூடிற்று. அவ்வமயம் தோழர்கள் கே. ஆர். சங்கரதாஸ், எஸ். சிவலிங்கம் ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

## தேவை

"குடி அரசு" வாரப் பத்திரிகை விற்பனை செய்ய டிபாசிட்டு கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. மற்ற விபரங்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

1. திருப்பூர்
2. உடுமல்பேட்டை
3. விருதுநகர்
4. திருநெல்வேலி
5. கிருஷ்ணகிரி

மானேஜர்.

## "குடி அரசு" பதிப்பக வெளியீடுகள்

### 3 அணா புத்தகங்கள்

பெண்ணுரிமையும் மதமும்
இராமாயண பாத்திரங்கள்
இரண்டு வழிகள் (இங்கர்சால்)
சீர்திருத்த மார்க்கம் ( „ )
மேயோகூற்று மெய்யா பொய்யா?
பேய்-பூதம்-பிசாசு
மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன
மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்
நான் சமசயவாதி ஆனதேன்?
பொதுவுடைமைத் தத்துவங்கள்
தமிழ் வரிவடிவ ஆராய்ச்சி
மறுப்புக்கு மறுப்பு (சாமி வேதாசல குறிப்பு)

### 6 அணா புத்தகங்கள்

மனிதன் என்றால் என்ன?
கர்ப்ப ஆட்சி
மெஞ்ஞானமுறையும், மூடநம்பிக்கையும் 1-ம் பாகம்

கிடைக்குமிடம்:—
குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42 Cutchery street, Erode.